புதுமலர்: 20 இதழ்: 03 வைகாசி - ஆனி

# அனல்

01.05.2023

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



## சிறப்பான கிறிஸ்தவ வாழ்வுக்கான
## இயேசுவின் சிறப்பான 4 நடத்துதல்கள்

ஆசிரியர்:
போதகர் வே. மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு: 2023

**வைகாசி**

-

**ஆனி**

பக்கம்: 32

# பொருளடக்கம்


01. அனலின் குரல்

02. கதையும் கற்றதும்

03. நற்செய்திப்பகுதி

04. சிறுவர் வட்டம்

05. குறுக்கெழுத்துப்போட்டி - 113

06. வாலிபர் வளாகம்

07. வினா விடை - 115

08. பெண்கள் பக்கம்

09. அருட்பணியாளர் சரிதை

10. அனலின் ஆன்மீக விருந்து

11. அநீதியை சகித்தல்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:

**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

வாசக உள்ளங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். வைகாசி - ஆனி இதழினூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

தாவீது சிறிவன் - கோலியாத் பெரியவன். சிறியவனுக்குள் இருந்த பெலனும் பெரியவனுக்குள் இருந்த பெலவீனமும் அவர்கள் நேருக்கு நேர் சந்தித்த போது வெளிப்பட்டது. சிறியதாவது வென்றான்.

ஏழைப் பெண்ணுக்கு இருந்த நிறைவான மனமும் செல்வந்தர்களிடம் இருந்த குறைவான மனமும் காணிக்கைப் பெட்டிக்கு முன் வெளிப்பட்டது.

ஆயக்காரனின் தாழ்மையும் பரிசேயனின் பெருமையும் ஆலயத்தில் அறியப்பட்டது.

ராஜாவின் பெலத்தைப் பார்க்கிலும் ஏழையின் ஞானமே சிறந்தது என்பது பட்டணத்தைப் பிடித்ததில் விளங்கியது.

ஞானிகளின் தோல்விகளும் பைத்தியமானவர்களின் தெரிவிலும் தேவனிடத்திலுண்டு.

தேவன் எதைச் செய்கிறாரோ, தேவனுக்கு ஏற்றதாக யார் செயற்படுகின்றார்களோ, சிந்திக்கிறார்களோ, தேவ சித்தத்திற்குள் யார் இணைகிறார்களோ நீங்கள் தான் சிறியவனானாலும் பெலவான், நீ ஏழையாய் இரந்தாலும் வள்ளலாய் இருக்க முடியும். நீ கௌரவமில்லாதவனாக இருக்கலாம். ஆனால் தேவனால் தூய்மையாக்கப்பட்டவனாக வாழ முடியும்.

குறைவானவர்களுக்குள் இருக்கும் நிறைவுகளையும் நிறைவானவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறவர்களுக்குள் இருக்கும் குறைவுகளையும் தேவன் வெளிப்படுத்துவார். பலர் நாங்கள் நினைக்கிற நிறைவு தான் எமக்கு குறைவு. எண்ணவேண்டியதற்கு மிஞ்சி ஒருவனும் தன்னைக் குறித்து எண்ணாதிருக்கக்கடவன். தேவனைச் சார்ந்து கொள்ளுங்கள். அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். தேவனிடமிருந்து கனத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்.

~ ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## எல்லா துக்கங்களும் முடிவுக்கு வரும்

❑ வை. விமலதாஸ்

தனது சிறிய மகனை அழைத்துக்கொண்டு அவனது தந்தை ஒரு காட்டிற்குச் சென்றார். அப்போது அவர் தன் மகனுக்கு ஒரு சவாலை முன்வைத்தார்.

'மகனே, இப்போது உனக்கு முன் ஒரு பெரிய சவால் உள்ளது. அதில் வெற்றி பெற்றால், நீ பெரிய வீரனாகி விடுவாய். இன்று இரவு முழுவதும் நீ தனியாக இந்தக் காட்டிலேயே இருக்க வேண்டும். உன் கண்களை கட்டிவிட்டு நான் சென்றுவிடுவேன். ஆனாலும் நீ பயப்படக்கூடாது, வீட்டிற்கு ஓடிவந்துவிடவும் கூடாது' என்றார்.

மகனும் ஆர்வத்துடன் தந்தையின் சவாலை சந்திக்கத் தயாரானான்.

அவனது கண்களைத் தந்தை துணியால் இறுகக் கட்டினார். பிறகு, சென்று வருகிறேன் என்று கூறிவிட்டு தந்தை திரும்பிச் செல்ல ஆயத்தமானார். இப்போது தந்தை திரும்பிச் செல்லும் காலடி ஓசை, மெல்ல மெல்ல மறைந்தது. அதுவரை தந்தை அருகில் இருக்கிறார் என்ற தைரியத்தில் இருந்த அவனுக்கு, தூரத்தில் ஆந்தை கத்துவதும் நரி ஊளையிடுவதும் நடுக்கத்தைக் கொடுத்தது.

காட்டு விலங்குகள் வந்து தாக்கிவிடுமோ என்ற அச்சத்தில் அவனது இதயத்துடிப்பு வழக்கத்தைத் தாண்டி எகிறியது.

மரங்கள் காற்றில் பயங்கரமாக ஆடி அசைந்தன. மழை வேறு தூறத் தொடங்கியது. கடுங்குளிர் ஊசியாய் அவனது உடலைத் துளைத்தது.

'அய்யோ! இப்படி நிர்க்கதியாய்த் நடுக்காட்டில் தவிக்க விட்டு தந்தை போய்விட்டாரே! யாராவது வந்து என்னைக் காப்பாற்றுங்களேன்' என்று பலமுறை கத்திப் பார்த்தான். பயனில்லை. அவனது சத்தத்திற்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை.

சிறிது நேரத்தில், இனி கத்திப் பயனில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. திடீரென்று அவனுக்குள் ஒரு துணிச்சல். சரி, என்னதான் நடக்கும், பார்ப்போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சுற்றுப்புறத்தில் கேட்கும் ஓசைகளை ஆர்வத்துடன் கவனிக்கத் தொடங்கினான். இப்படியே அந்த இரவு கழிந்தது. விடியற்காலையில் லேசாகக் கண்ணயர்ந்தான். சூரியன் உடம்பைச் சுட்டபோதுதான், கண்கட்டைத் திறந்துப் பார்த்தான். கண்ணைக் கசக்கிக்கொண்டு எதிரே பார்த்தபோது, அவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது! பெரும் ஆனந்தம் அடைந்தான்! அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

'அப்பா' என்று கூவி அருகில் அமர்ந்திருந்த தன் தந்தையைப் பாய்ந்து தழுவிக் கொண்டான்.

'அப்பா நீங்கள் எப்போது வந்தீர்கள்?' என்று ஆவலாகக் கேட்டான்.

சோர்வும் மகிழ்ச்சியும் கொண்டிருந்த அந்தத் தந்தை,

'நான் எப்போது மகனே உன்னை விட்டுப் போனேன்' என்றார்.

'இரவு இங்குதான் இருந்தீர்களா? பிறகு ஏன் நான் பயந்து அலறியப் போதெல்லாம் என்னைக் காப்பாற்றவில்லை? ஏன் என்னிடம் எதுவும் பேசவில்லை?' என்று கேட்டான்.

'உன் மனோதிடம் வளர வேண்டும். நீ எதற்கும் அஞ்சாத வீரனாக வேண்டும் என்பதற்காக மௌனம் காத்தேன். ஏனென்றால் அச்சத்தின் உச்சத்தை எட்டும்போது, துணிச்சல் தானே வரும்' என்றார் தந்தை. மகனுக்கு தந்தையின் நோக்கம் புரிந்தது.

ஆம் நண்பர்களே, அந்த தந்தை தன் மகனுக்கு செய்த செயலைப் பார்த்தீர்களா? தந்தை அந்த இரவு முழுவதும் மகனுடன் தான் இருந்தார், ஆனால் அவன் அழைத்த உடன் எந்த பதிலும் கொடுக்காமல் மௌனமாக இருந்தார். காலை வந்த போது மகன் தகப்பன் தன்னோடு இருந்ததைக் கண்டு கொண்டான். நம்முடைய ஆண்டவரும் அந்தத் தந்தையைப் போலத்தான், நம்மோடு இருக்கிறார். நம்முடைய துன்பத்திலும் சோகத்திலும் நாம் தவிக்கும்போது துவண்டுவிடாமல், நாம் விசுவாசத்தில் வளரவேண்டும் என்பதற்காகவே பல நேரங்களில் மௌனம் காத்து வெறும் பார்வையாளரைப் போல் இருக்கிறார். தேவன் நம்மை கைவிட்டுவிட்டார் என்று பலவேளைகளில் நாம் சிந்திக்கிறோம். ஆனால் நம்முடைய ஒவ்வொரு காரியங்களையும் தேவன் கண்ணோக்கிக் கொண்டேயிருக்கிறார். **மத்தேயு 28:20 நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எல்லாம் பார்த்துக் கொள்வார்

பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு அனலின் மூலம் இனிய நல்வாழ்த்துக்கள்.

**ஏசாயா 58:11 கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்.** இவ் வார்த்தையின்படி தேவன் தாமே உங்களை இந்நாள் வரையும் கிருபையாக நடத்தினார். அவருக்கே சகல கனமும் மகிமையும் உண்டாகட்டும். ஆமென்.

**ஆதியாகமம் 22:14 ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள்வரைக்கும் சொல்லப் பட்டு வருகிறது.**

திருமண வாழ்க்கையில் பல காலங்கள் கடந்தும் பிள்ளையில்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த தம்பதி யினர். கூடவே காலங்கள் உருண்டோட பிள்ளை பெறுவதற்கான சரீர தகமை களையும் இழந்து நின்ற வேளையிலும் தேவனால் நம்பிக்கையூட்டப்பட்டு விசு வாசத்தினாலே கர்ப்பந்தரிக்க பெலன டைந்து நல்ல முதிர்ந்த வயதிலே அழகான ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத் தாள். அவனுக்கு ஈசாக்கு என்னும் பெயர் சூட்டினர், மகிழ்ந்தனர், கொண் டாடினர். அவர்கள் தான் வேதாகமத்தில் விசுவாசத்தின் வீரனாக போற்றப்படும் ஆபிரகம் – சாராள் தம்பதியினர்.

பல காலங்கள் கழித்து தாம் கொடுத்த குழந்தையை தமக்கே தகனபலியாக பலியிடும்படி தேவன் கேட்ட போது சற்றும் தயங்காமல் தேவனுக்காக பலியிட ஆயத்தமானார் ஆபிரகாம்.

ஆபிரகாம் தம் மேல் வைத்துள்ள விசுவாசத்தை, நேசத்தை கண்டு ஆச்சரியப்பட்ட தேவன் ஆபிரகாமை தடுக்கிறார். தேவன் தடுத்தாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனுக்காக ஏதாவது ஒன்றை கொடுக்க வேண்டும் என எண்ணிய வன் கண்ணில் தென்பட்டது ஒரு கடா. மகனுக்கு பதிலீடாக ஆட்டை தகனபலி யாக பலியிட்டான். **ஆதியாகமம் 22:13**

ஆம்! எனக்கு அன்பானவர்களே, எம்முடைய வாழ்க்கையிலும் நாமும் பல நன்மைகளை காணாது ஏக்கத்தோடு, வேதனையோடு நாட்களைக் கழித்ததுண்டு. ஆனாலும் கிருபையுள்ள இரக்கத்தின் தேவன் எமது குறைகளையெல்லாம் ஏற்ற நேரத்திலே நிறைவாக்கி அதிசயமாக நம்மை ஆசீர்வதித்து எம் வேதனைக்கும், கண்ணீருக்கும், ஏக்கத்திற்கும் ஓர் முற்றுப்புள்ளியை வைத்துவிடுகின்றார்.

கூடவே காலங்கள் கழிந்தோட எம்முடைய எண்ணம், நேசம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத்தின் மேல் இருக்கிறதா? அல்லது அசீர்வாதத்தை தந்தவர் மேல் இருக்கிறதா? என்று தேவன் சோதித்துப் பார்க்கும் நாட்களில் எம்முடைய நிலைமை எப்படி இருக்கின்றது? எம்முடைய பிரதிபலிப்பு எப்படி எம்மை தேவனுக்கு வெளிப்படுத்துகிறது?

பிரியமானவர்களே.. ஆபிரகாம் தன் குமாரனை பலியிடாதபடி தேவன் தடுத்த போது சந்தோஷமாக, மகிழ்ச்சியாக வீட்டிற்கு சென்றிருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. மாறாக தேவனை மகிமைப்படுத்த யோசித்தான். ஏதாவது ஒன்றை பதிலீடாக கொடுக்க வேண்டும் என்ற ஏக்கம். ஆம் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும் தேவன் அவனுக்காக ஓர் ஆட்டுக்கடாவை ஆயத்தம் பண்ணினார்.


அன்பான சகோதரனே, சகோதரியே நாமும் நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கானதை தேவனுக்கு கொடுக்க தீர்மானிக்கும் போது அல்லது தேவனுக்காக இழக்க ஒப்புக்கொடுக்கும் போது தேவன் ஒரு நாளும் நம்மை வெட்கப்படவிடாமல் நமக்கான எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்பது நிச்சயம்.

தேவனை உண்மையாக நேசிப்பவர்களுக்கு தேவனுக்காக இழப்பதென்து பெரிதாக தோன்றுவதில்லை.

பக்தன் யோபு பத்து குமாரரை இழந்தான். சொத்து, சுகம், மகிமை எல்லாவற்றையும் இழந்தான். ஆனாலும் மிக எளிமையாக கூறினான்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் என்பதாக. காரணம் தேவனை உண்மையாக நேசித்தமையே.

ஆம் நாமும் எம்முடைய வாழ்க்கையில் தேவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ள வேண்டும் என நினைத்தால் எம்மிடம் உள்ள எல்லாவவற்றிற்கும் மேலாக அவரை நேசிப்போம்.

யோபுவுக்கு இரட்டத்தனையான ஆசீர்வாதத்தை கட்டளையிட்ட ஆண்டவர் ஆபிரகாமைப் பார்த்து நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து பெருகவே பெருகப்பண்ணுவேன் என்று சொன்னார். தம்மை நேசிக்கும் உங்களுடைய வாழ்க்கையிலும் எல்லாம் பார்த்துக் கொள்வார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காகங்களைக் கவனித்துப் பாருங்கள்

❒ ஜசிந்தா அக்கா





அதி காலையில்
கா... கா... என்று
கர்த்தரை நோக்கித்
துதிக்கின்றன.



தம்பி, தங்கை
யரே நீங்களும் தேவனைத்
துதிக்கின்றீர்களா?


நாளைக்காக கவலைப்படாத காகம் சேர்த்தும் வைப்பதில்லை. செல்லப் பிள்ளை களே நீங்கள் கவலைப்படுகிறீர்களா?



கவலையை விட்டு
விடுங்கள்.



தனது ஆகாரத்திற்
காகக் கர்த்தரை நோக்கிக்
கூப்பிடும்.



பிள்ளைகளே உங்கள் தேவைகளுக்காக கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறீர்களா? கூப்பிடுங்கள். பெற்றுக் கொள்வீர்கள்.

தேவனுக்கு கீழ்ப்படிந்து தீர்க்கன் எலியாவைப் போஷித்து நீங்களும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தேவ ஊழியருக்கு உதவுவீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளைகளே காகங்கள் கூடிவாழும்.

தேவ பிள்ளைகளோடு உங்களுக்கும் ஐக்கியம் இருக்கிறதா?

ஆகாரம் கிடைத்தால் மற்றைய காகங்களையும் கூப்பிட்டுக் கொடுத்து சாப்பிடும்.



பசி உள்ளவனுக்கு உங்கள் ஆகாரத்தைக் கொடுத்து சாப்பிடுவீர்களா?



தேவை ஏற்படின் கூட்டைப் பிரித்து வேறு இடத்தில் கட்டும்.

நம்முடைய கூடும் பூமியிலிருந்து

பரலோகத்திற்கு மாற்றப்படும்.

பரலோகத்தை வாஞ்சிப்போம்.

பிரியமான பிள்ளைகளே, காகங்களைக் கவனித்துப் பாருங்கள் என்றவர் உங்களைக் கவனிக்கிறார். ஏன் தெரியுமா? காகங்களுக்குப் பரலோகம் இல்லை. ஆனாலும் அவைகளுக்குள் எத்தனை நல்ல குணங்கள். ஆனால் என்னுடைய பிள்ளைகளிடத்திலே காண்பது அரிதாயிருக்கிறதே என்று துக்கப்படுகிறார். கீழ்ப்படியுங்கள். பரலோகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**பறவைகளைப்பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். லூக்கா 12:24b**



**சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**


**வினாவிடை - 114**
வ.வசிகலா
(தர்மபுரம்)



**குறுக்கெழுத்துப் போட்டி - 112**
இ.வோஜினி
(வேரவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குறுக்கெழுத்துப் போட்டி 113

### இடமிருந்து வலமாக

01. சிதேக்கியாவின் அப்பா
04. தாவீதுக்கு சகல நாட்களிலும் சிநேகிதனாயிருந்த தீருவின் ராஜா
07. 'உள்ளே வா, நீ கெட்டிக்காரன், நீ நற்செய்தி கொண்டு வருகிறவன்' என்று அதோனியாவால் அழைக்கப்பட்டவன்
08. மிஸ்பாவுக்கும் சேணுக்கும் நடவே நிறுத்தின கல்லுக்கு சாமுவேல் வைத்த பெயர்
10. 'புத்திமதிகளைக் காத்துக் கொள்ளுகிறவன் ................ இருக்கிறான்'

### வலமிருந்து இடமாக

02. ஈராம் தனக்கு சாலொமோன் கொடுத்த பட்டணங்களுக்கு இவ்வாறு பெயரிட்டான்
03. குற்றமுள்ளவன் தன் வழிகளில் மாறுபாடுள்ளவன், சுத்தமுள்ளவனோ தன் ........ செம்மையானவன்
06. இஸ்ரவேலர் குக்கோதாவிலிருந்து பிரயாணம் பண்ணி இங்கே போனார்கள்
09. 'நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு மரங்களை அரசாளப் போவேனோ?' எனக்கூறியது
11. தாவீது தன் சத்துருக்களை முறியடித்த ஸ்தலத்துக்கு இவ்வாறு பெயரிட்டான்

### மேலிருந்து கீழாக

02. தெர்பையானாகிய இவன் பவுலின் மூன்றாம் பிரயாணத்தில் வழித்துணையாய் இருந்தான்
03. சேபாவையும் சல்முனாவையும் தொடர்ந்து பிடித்து சேனை முழுவதையும் கலங்கடித்தவன்
08. உன் துணிகரத்தையும் உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்று தாவீதிடம் கூறியவன்


### கீழிருந்து மேலாக

05. 40 ஒட்டகங்களின் சுமையான காணிக்கையுடன் எலிசாவை எதிர்கொண்டவன்
08. ஈசாயின் மூத்த குமாரன்
09. சோகெலெத் என்னும் கல்லின் அருகே ஆடு மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் அடித்தவன்
11. அப்சலோம் ராஜகுமாரரை விருந்துக்கு அழைத்த இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




☐ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான வாலிபப் பிள்ளைகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் அனைவரும் உடல் சுகத்துடனும், உள சமாதானத்துடனும் இருப்பதற்கு ஆண்டவர் கிருபை செய்வாராக.

தொடர்ந்தும் ஆண்டவர் மேல் நம்பிக்கையாக இருங்கள். வேதாகமம் சொல்கின்ற ஓர் வசனத்தை கவனியுங்கள். **நீதிமொழிகள் 23:18 நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது.** தேவன் தந்த இந்த வாக்குத்தத்தத்தை உறுதியாக நம்புங்கள். ஏனெனில் நீங்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளுக்கு நிச்சயமாகவே ஓர் முற்றுப்புள்ளியை தேவன் வைக்க விரும்புகிறார். தொல்லைகள் நிறைந்த வாழ்க்கை வாழ்கின்றீர்களா? அலைந்து அலைந்து அலுத்துப்போய்விட்டீர்களா? நம்பிக்கையை இழந்து விரக்தியின் விளிம்பில் நிற்கின்றீர்களா? அல்லது சாவு தான் முடிவு என நினைக்கின்றீர்களா?

கலங்க வேண்டாம்!. உங்களுக்கு விரோதமான எல்லா அக்கிரமச் செயல்களுக்கும் தேவன் ஓர் முடிவை உண்டுபண்ணுவார். உங்கள் நம்பிக்கை வீண் போகாது. இதனை வாசிக்கின்ற போதே உற்சாகமடைவீர்களாக! கர்த்தரை இன்னும் அதிகமாகத் துதிப்பீர்களாக; கர்த்தர் உங்களைக் கைவிடமாட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வாலிபர் வளாக படிப்பினைக்குள் செல்வோம்.

'முடிவு என்ன?' என்ற தலைப்பில் ஒரு சில வேதாகம சத்தியங்கள் அடங்கிய புதுத்தொடர் ஒன்றினை ஆரம்பித்துள்ளோம். கடந்த காலங்களில் சிம்சோன் தொடர் உங்களில் அனேகருக்கு மிக பிரயோசனமாக இருந்தது என்பதை அறிந்து தேவனுக்கு நன்றி கூறுகின்றேன். 'முடிவு என்ன?' எனும் தொடரும் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகின்றேன். தொடர்ந்து வேத பாடங்களை தியானித்து உங்கள் சாட்சிகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

கடந்த இதழில் ஆதாம் - ஏவாள் எடுத்த முடிவைக் குறித்து உங்களுக்கு காண்பித்திருந்தேன். ஏவாளின் தவறான தீர்மானம் எப்படி ஆதாமை பாதித்தது என்பதையும்; ஆதாம் ஏவாளுக்காக எடுத்த பிழையான முடிவு எப்படி அவரது குடும்பத்தை பாதித்தது என்பதையும் கடந்த இதழில் வாசித்தோம்.

இவ் இதழிலும் ரெகோபெயாம் எனும் மனிதன் எடுத்த முடிவைக் குறித்து கற்கவிருக்கின்றோம். ஜெப சிந்தையுடன் தொடர்ந்து வாசியுங்கள்.

## 02. ரெகொபெயாமின் தீர்மானம் அல்லது முடிவு

**1இராஜாக்கள் 12:1-3 (1.) ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி, இஸ்ரவேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்தபடியால், அவனும் சீகேமுக்குப் போனான். 2. ராஜாவாகிய சாலொமோனை விட்டு ஓடிப்போய், எகிப்திலே குடியிருந்த நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமோ, எகிப்தில் இருக்கையில் இதைக் கேள்விப்பட்டான். 3. அவர்கள் யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தார்கள்; அவனும் இஸ்ரவேல் சபை அனைத்தும் வந்து, ரெகொபெயாமை நோக்கி:**

நாட்டின் வட பகுதியில் இருந்த மக்களைக் கவர்வதற்காக சீகேமுக்குச் சென்று அங்கு தனது இராஜ பட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு ரெகொபெயாம் திட்டம் பண்ணியிருக்கலாம். தனது வாழ்வில் மிக உயர்ந்த ஸ்தானத்தை, பதவியை அடைகின்ற அவ் வேளையில் மிக முக்கியமான ஓர் தீர்மானத்தை அல்லது முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு அவர் தள்ளப்படுகின்றார்.

நமது வாழ்விலும் பல ஆசீர்வாதங்களை, நன்மைகளை அடைகின்ற தருணங்களில் அடுத்த கட்ட நகர்விற்காக தீர்மானிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வருகின்றது.

*உதாரணமாக ஓர் கதையைச் சொல்ல விரும்புகின்றேன்: ஒருவர் மிகவும் வறண்ட பிரதேசத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தாராம். மிகத் தூரம் வந்தவர் கொண்டு வந்த தண்ணீர் எல்லாம் முடிந்தபடியினால் மிகவும் தாகத்தோடு தண்ணீருக்காக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைந்தார். தாகம் தீர்க்காமல் இனி ஓர் அடியேனும் எடுத்து வைக்க முடியாது என்ற நிலைக்கு அவர் வந்த போது ஓர் குழாய் கிணற்றைக் கண்டு சந்தோஷமாக அங்கு சென்றார். அங்கு ஒரு வாளிக்குள் தண்ணீர் இருந்தது. அதனை எடுத்து குடிக்கப் போகும் போது ஓர் அறிவித்தல் பலகை தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் 'தேவையான தண்ணீர் வேண்டுமானால் இருக்கும் தண்ணீரை குழாய்க்குள் ஊற்றிவிட்டு அடிக்கவும். அப்பொழுது தண்ணீர் வரும்' என்று எழுதப்பட்டிருந்தது. இவருக்குள் ஊற்றினால் தண்ணீர் வருமா? அல்லது கிடைத்ததையும் இழந்து விடுவேனா? என்ற பல கேள்விகளும் சந்தேகங்களும் எழும்பியது. இருப்பினும் இறுதியில் தன்னை திடப்படுத்திக் கொண்டு இருந்த தண்ணீரை குழாயிற்குள் ஊற்றிவிட்டு அடித்த போது தேவையான தண்ணீர் அவருக்கு மடை திறந்த வெள்ளம் போல் வந்ததாம்.

ஆம் அருமையானவர்களே! ஆசீர்வாதங்களை நீங்கள் அனுபவிக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம். இருப்பினும் அவ் வேளைகளில் வேதாகமம் காட்டும் அறிவுரைகளைத் தள்ளிவிடாதீர்கள்.

ரெகொபெயாம் அந்த ஆசீர்வாதத்தை அனுபவிக்கப் போகின்ற வேளையில் ஜனங்கள் என்ன கேள்விப்பட்டார்கள்? அதற்கு அவன் கொடுத்த பதில் என்ன? என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

**1இராஜாக்கள் 12:4 உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.**

தனக்குரிய ஆசீர்வாதத்தை அவன் சுதந்தரிக்கப் போகின்ற நேரத்தில் ஓர் தீர்மானத்தை எடுக்க வேண்டிய கட்டத்திற்குள் அவன் தள்ளப்படுகின்றான். அதாவது அப்பாவின் பாணியில் ஆட்சி செய்வதா? அல்லது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு புதிய அதே நேரம் சரியான முறையில் ஆட்சி செய்வதா? குறிப்பாக தனது தகப்பனின் தவறான அணுகுமுறையில் இருந்து வெளியே வருவதற்கான சந்தர்ப்பம் அவனுக்கு கிடைத்தது.

அமெரிக்க தேசத்தில் நடைபெற்ற ஓர் உண்மைச் சம்பவத்தை பதிவிட விரும்புகின்றேன். கர்த்தருக்குப் பயந்த ஓர் குடும்பம் இருந்தது. அவர்களுக்கு நெடு நாட்களாக குழந்தை இல்லை. இதனால் இவர்கள் ஓர் குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு சென்று தங்களது நிலைமைகளைச் சொல்லி தங்களுக்கு யாருமற்ற ஓர் குழந்தையைக் கொடுத்தால் அதை நல்ல படியாக வளர்த்தெடுப்போம் என வாக்குறுதி கொடுத்தார்கள். சில நாட்களுக்குள்ளேயே ஒரு பெண் குழந்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. விரும்பினால் அந்த பிள்ளையை தத்தெடுத்துக் கொள்ளுங்கள் என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்தது. தேவனுக்காக வாழ்ந்த இந்தக் குடும்பம் அழகான அந்தப் பெண் குழந்தையை வாங்கிக் கொண்டு சந்தோஷமாக வளர்க்கின்ற நாட்களிலேயே கர்த்தர் தன் மகிமைக்காக வாழ்ந்த அப் பெண்ணின் கர்ப்பத்தை திறந்தார். அழகான இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தது. அந்தப் பெற்றோர் மூன்று பிள்ளைகளையும் ஒரே கர்ப்பப் பிறப்பைப் போல் பாவித்து எவ்வித வித்தியாசமும் இன்றி ஒரேவிதமான ஆசீர்வாதங்களைக் கொடுத்து வளர்த்தார்கள். இருப்பினும் பிள்ளைகள் வளர்ந்து வாலிப வயதினை அடைந்த போது வாங்கி வளர்த்த பிள்ளையின் நடத்தையில் வித்தியாசம் தெரிய ஆரம்பித்தது. அவள் தவறான பழக்க வழக்கங்களில் ஈடுபட ஆரம்பித்தாள். வீட்டிற்கு வெளியே சென்றால் இருளான பின்பே திரும்ப வருவாள். ஆனால் மற்றைய இரண்டு பிள்ளைகளும் நன்றாக இருந்தனர். பெற்றோரின் பராமரிப்பில் எவ்வித வித்தியாசமும் இல்லை. இருப்பினும் வாங்கி வளர்த்த பிள்ளை சீர்கெட்டுப் போய்க்கொண்டிருந்தது. அந்தப் பிள்ளைக்கு அவர்கள் எவ்வளவோ சொல்லியும் அதற்கு அப்பிள்ளை செவிமடுக்கவில்லை. அவளுடைய நிலை மோசமாகிக் கொண்டே சென்றது. இது அவர்களுக்கு வேதனையாக இருந்தது. அதனால் தாயும் தகப்பனும் ஒரு நாள் உபவாசத்தோடு தேவ சமூகத்தில் இருந்து ஜெபித்த போது தேவன் அவர்களுக்கு ஓர் தரிசனத்தைக் காண்பித்தார்.

அந்த தரிசனத்திலே இந்தப் பிள்ளையின் தாய் இவளை விபச்சாரத்தின் மூலமே பெற்றெடுத்துள்ளாள். ஆகவேதான் அந்த தாயின் ஆவி இவள் வாலிப வயதிற்குள் வந்த போது இவளைத் தாக்குகின்றது என்று தேவன் சொன்னார். அப்பொழுது அவர்கள் வேதனையோடு 'ஆண்டவரே இதனை எப்படி தீர்ப்பது?' என்று கேட்ட போது தேவன் சொன்னாராம்: நடந்த எல்லாவற்றையும் பிள்ளைக்குச் சொல்லிவிட்டு ஓர் கேள்வியை பிள்ளையிடம் கேளுங்கள். அதாவது நீ உன் அம்மாவுடைய வழியில் நடக்கப்போகின்றாயா? அல்லது ஆண்டவர் இயேசுவின் வழியில் நடக்கப் போகின்றாயா? அவள் என்ன தீர்மானம் எடுக்கின்றாளோ அதன்படி அவள் நடத்தப்படுவாள் என்று சொன்னாராம்.

அந்த பெற்றோர் குறிப்பிட்ட ஓர் நாளில் தங்கள் கர்ப்பப்பிறப்பாகிய இரு பிள்ளைகளையும் தங்களுடைய உறவினர் வீட்டிற்கு அனுப்பிவிட்டு இந்தப் பிள்ளையை வைத்துக் கொண்டு ஜெபம் ஒன்றை ஆரம்பித்துவிட்டு ஆண்டவர் வெளிப்படுத்தியபடி எல்லாவற்றையும் கண்ணீரோடு சொல்லிவிட்டு ஆண்டவர் கேட்கச் சொன்ன கேள்வியை கேட்டுவிட்டு அமைதியாக இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அப்பிள்ளை கண்ணீரோடு தேம்பித் தேம்பி அழுதவளாக நான் என் அம்மாவின் வழியில் அல்ல, என் ஆண்டவர் வழியில் தான் நடக்கப்போகின்றேன் என்ற நல்ல தீர்மானத்தை எடுத்து ஆண்டவருக்காக தன்னை ஒப்புக்கொடுத்தாள். இன்று அவர்களுடைய வயிற்றில் பிறந்த இரண்டு பிள்ளைகளைப் பார்க்கிலும் அவளை அக் குடும்பத்திற்கு அதிக ஆசீர்வாதமான மகளாக கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார்.

இச் சம்பவம் நமக்கு எதனைக் காண்பிக்கிறது? அதாவது தேவன் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பங்களைக் கொடுக்கிறார். குறிப்பாக நமது பரம்பரைக் கட்டில் இருந்து வெளியே வருவோம். நமது மூதாதையரைப் போல் நாமும் வைராக்கியமாகச் செயற்படாமல் தேவனுடைய வழியில் நடப்போமாக! உனது தீர்மானம் சரியானதாக இருக்குமானால் நிச்சயம் கர்த்தர் உன்னை விடுதலை யாக்கி ஆசீர்வதிப்பார்.

உனது தகப்பன் உலக சண்டியனாக இருக்கலாம், உனது தாய் ஊர் வம்பு பேசுபவராக இருக்கலாம். இன்னும் இதனைவிட பல தவறுகளை உனது பெற்றோர் செய்பவர்களாக, செய்தவர்களாக இருக்கலாம்.

என் மகனே! மகளே! அதனைவிட்டு நீ வெளியே வரவேண்டும் என இப் புத்தகம் மூலம் தேவன் உன்னோடு பேசுகின்றார்.

**சங்கீதம் 45:10 குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு.**

பெற்றோர்களுடைய உலகப் பிரகாரமான உயர்வுகள்; அவர்களுடைய சுய நீதிகள், அவர்களுடைய தனிப்பட்ட நம்பிக்கைகள், நடத்தைகள் என்பவற்றை மறந்து வேதாகமம் காண்பிக்கும் நீதி, நம்பிக்கைகளை நீ கைக்கொள்ளும் போது தேவன் நிச்சயம் உன்னை உயர்த்துவார்.

தன் தகப்பன் போல் அல்லாது நீதி நேர்மையின்படி ஓர் புதிய முறையில் ஆளுகை செய்யும்படி ரெகொபெயாமிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவன் சொன்ன பதில் பின்வருமாறு அமைந்தது.

**1இராஜாக்கள் 12:5 அதற்கு அவன்: நீங்கள் போய், மூன்றுநாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பிவாருங்கள் என்றான்; அப்படியே ஜனங்கள் போயிருந்தார்கள்.**

உடனே எழுந்தமானமாக அவன் முடிவை எடுக்காமல் சரியான முடிவை எடுப்பதற்கு மூன்று நாட்களை அவகாசமாகக் கேட்டான். அவனுடைய ஆரம்ப அடிகள் மிக நிதானமாக சரியான முறையில் வைக்கப்படுவதைக் காண்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் பிரியமானவர்களே! எம்முடைய வாழ்க்கையில் நாம் இதனைச் சரியாக புரிந்து கொள் வேண்டும். எமது குடும்பக் காரியங்கள், தொழில்கள், திருமணங்கள், பதவிகள் எதுவாக இருந்தாலும் அதற்கான அனுமதியை தேவ சமூகத்தில் இருந்து தான் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். எல்லா செயல்களிற்கும் முன்பதாக தேவ சமூகத்தில் காத்திருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

*எனக்கு ஓர் தகப்பனைத் தெரியும். அவருடைய குடும்ப நிலை அவ்வளவு வசதியானது அல்ல. அத்தோடு அவருக்கு அதிகமான பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். ஒரு முறை வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் அவரது மகளை தனது மருமகளாக்கும் எண்ணத்தோடு அத்தகப்பனிடம் வந்து நீங்கள் ஒரு செலவும் செய்யத்தேவையில்லை. உங்கள் அனுமதியை மாத்திரம் தாருங்கள். மற்ற எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார். அதற்கு அந்த தகப்பன் என்ன சொன்னார் தெரியுமா? உடனடியாக என்னால் எதுவும் சொல்ல முடியாது. ஜெபித்து தேவ சித்தம் அறிந்து தான் பதில் சொல்வேன் என்றார்.*

உண்மை தான். நம்முடைய வாழ்வில் நாம் ஒரு போதும் அவசரப்பட்டு தீர்மானங்களை எடுக்கக்கூடாது. இலவசங்களுக்காக உடனே 'ஆமா' போடவேண்டாம். தேவனுடைய பாதத்தில் காத்திருந்து கர்த்தர் கொடுக்கின்ற தீர்மானங்களைச் செய்கின்ற பொழுது தேவன் நிச்சயமாக ஆசீர்வதிப்பார்.

## வினா விடை - 115

01. நகோமியின் மடியில் வளர்ந்த பிள்ளையின் பெயரென்ன?

02. நான் கர்த்தருடைய உக்கிரத்தினால் நிறைந்திருக்கிறேன் என்று சொன்னவன் யார்?

03. நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும் என்றவர் யார்?

04. 'நான் பணியாத மாடு போல் அடிக்கப்பட்டேன்' என்றது யார்?

05. தன் ஆத்துமாவை கெடுத்துப்போடுகிறவன் யார்?

06. வானபரியந்தம் எட்டுகிற உக்கிரத்தோடே சகோதரரை சங்காரம் பண்ணினவர்கள் யார்?

07. தன் வீட்டாரோடு இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட ஜெபாலயத் தலைவன் யார்?


08. தன் தாயின் மடியில் இருந்து செத்த குழந்தை எது?

09. 'தேவனும் என்னைக் கைவிட்டார்' இவன் யார்?

10. ஆவியின் உக்கிரத்தினால் மனங்கசந்து போனவன் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ திருமதி. J.பிலிப்




இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்... வீட்டின் பகுதிகளில் கதவு மிகவும் முக்கியமான இடத்தை எடுக்கிறது. காரணம் வீட்டில் உள்ளவர்களையும் வீட்டு பொருட்களையும் பாதுகாப்பதற்கு ஒரு வீட்டிற்கு - கதவு மிகவும் முக்கியம். அதுமட்டுமல்ல உள்ளே இருப்பவர்களை வெளியே நிற்பவர்கள் பார்க்க முடியாது. அப்படியே வெளியே நிற்பவர்களையும் உள்ளே இருப்பவர்கள் பார்க்க முடியாதபடி கதவு காணப்படுகிறது.

ஒரு ஸ்திரி எலிசாவிடம் வந்து தன் கணவனுக்கு கடன் கொடுத்தவர்கள் கணவன் இறந்தவுடன் தன்னுடைய இரண்டு குமாரரையும் தங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ள வந்திருக்கிறார்கள் என அறிவித்தாள். அறிவிக்க வேண்டிய காரணம்? கணவன் பட்டகடனை திருப்பிக் கொடுக்க மனைவிக்கு வழி ஒன்றும் இல்லை. எலிசா அவளைப் பார்த்து நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றார். **(11இராஜாக்கள் 4:1-2)** அதற்கு அவள், ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்.

கடன் கொடுத்தவர்கள் வீட்டிற்கு வந்து பார்த்திருப்பார்கள். ஒரு குடம் எண்ணெய் மட்டும் வேறு ஒன்றும் வீட்டிற்குள் இல்லை. ஒரு குடம் எண்ணெயை வைத்து என்ன செய்வது? விதவையின் மகன்மார்களை கூட்டிச் சென்று அவர்களிடம் வேலை வாங்கலாம் என்ற எண்ணத்துடன் பிள்ளைகளை கேட்டிருப்பார்கள்.

சகோதரியே இவ் விதவையின் நிலையை சற்று சிந்தித்துப்பார். உனக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் நீ என்ன செய்திருப்பாய்? கணவன் இல்லை, இப்போது பிள்ளைகள் இருவரும் பறிபோகும் நிலை. இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேக குடும்பங்களில் குடும்ப உறவு உடைக்கப் படல், மரணங்கள், வியாதிகள், சண்டைகள், மூர்க்கமான காரியங்கள் நடைபெறுவதன் காரணம் கடன் தொல்லை.

இவ்விதவையோ ஓடினாள் ஒரு தேவ மனிதனிடம். அவருடைய கேள்விகளுக்கு உண்மையாய் நேர்மையாய் பதில் கொடுத்தாள். **11இராஜாக்கள் 4:2** உன்னிடம் என்ன உண்டு? ஒருகுடம்எண்ணெய்அல்லாமல்உமதுஅடியாளுடைய வீட்டில் வேறு ஒன்றும் இல்லை என்றாள்.

எலியா அவளைப் பார்த்து நீ போய் அயல்வீட்டுக்காரர்களிடம் அநேகம் வெறும் பாத்திரங்களை கேட்டு வாங்கு. அம்மா குடங்களுடன் வருவதைப் பார்த்த பிள்ளைகள் யோசித்திருப் பார்கள். அம்மா குடம் நிறைய ஏதோ கொண்டு வருகின்றார். இதை விற்று கடனைக் கொடுத்து நாம் இருவரும் தப்பிவிடலாம். ஆனால் வந்தது வெறும் குடங்கள்.

அவ் விதவை தேவ மனிதனாகிய எலிசா சொன்னபடி வெறும்குடம் மட்டும் கேட்டாய். அயல் மக்களிடம் ஆலோசனை கேட்கவில்லை. உள்ளே போய் கதவை பூட்டிக் கொண்டு பிள்ளைகளிடம் வெறும் குடங்களை கொடுத்தார் கள். பின் தன்னிடம் இருந்த எண்ணெயை வெறும் பாத்திரங்களுக்குள் வார்த்தாள். எல்லாம் நிரம்பியவுடன் வேறு பாத்திரங்களை பிள்ளைகளிடம் கேட்டாள். கொடுப்பதற்கு பிள்ளை களிடம் பாத்திரங்கள் இல்லை என்றார்கள். அப்பொழுது எண்ணெயும் நின்று போயிற்று. **11இராஜாக்கள் 4:2-6.** நடந்ததை தேவ மனிதனுக்கு அறிவித்தாள். விதவை அதை தேவ மனிதனுக்கு அறிவிக்காமல் விற்று கடனைத் தீர்த்திருக்கலாம். ஆனால் தேவ மனிதன் சொன்னபடி செய்தபடியால் கடன் தீர்ந்து அவளும் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணக் கூடியதாய் இருந்தது.

சகோதரியே, ஏன் கதவை பூட்ட வேண்டும். அவர்கள் தேவனோடு தனித் திருக்க வேண்டும். கர்த்தர் மேல் மாத்திரம் சார்ந்திருக்கும் போது அற்புதங்களைக் காண முடியும். கர்த்தருடைய பிள்ளை கள் ஜெபம் - விசுவாசம் எனும் அறைக்குள் போக கதவு பூட்டப்பட வேண்டும். அதிசயமான காரியம் எம் வாழ்க்கையில் நடைபெற கதவு பூட்டி தேவனு டன் தனித்திருக்க வேண்டும். அத்துடன் தேவ மனிதனின் ஆலோசனையை கேட்டு நடந் தால் தேவ ஆசீர்வாதத்தை வெளியரங்கமாய் காணமுடியும்.

இவ் விதவையைப் போல கர்த்தரின் அற்புதமான வழியைக்காண நாம்வெளியரங்க மான காரியங்களை விட்டு தேவனுடன் தனித்திருக்கும் போது வெளியரங்கமான பதில் களை நம் கண்கள் காணும். கடன் தீர்க்கப்படும் போது தேவ நாமம் மகிமைப்படும். தாயும் பிள்ளைகளும் பெற்ற சந்தோ ஷம் போல நீயும் பெறுவாய்.

**நீதிமொழிகள் 22:19**
**உன் நம்பிக்கை கர்த்தர்மேல் இருக்கும்படி, இன்றையதினம் அவைகளை உனக்குத் தெரியப் படுத்துகிறேன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பிரான்சிஸ் அசிசி 1181 - 1226

## சுயநலமின்றி...

ஒரு பெரிய பணக்கார குடும்பத்தில் பிறந்தார் பிரான்சிஸ் அசிசி. தந்தை மாபெரும் வியாபாரி. தன் சொத்துக்கள் அனைத்தையும் அனுபவிக்க அசிசியை பழக்கப்படுத்தினார். ஆனால் இவரின் எண்ணங்களோ இறைச் சிந்தையிலும் தவ வாழ்விலுமே நிலைத்து நின்றது.

ஒரு சமயம் பயணம் செய்து கொண்டிருந்த போது தொழுநோயாளி ஒருவன் அவரிடம் பிச்சை கேட்டு வந்தான். நோயைக் கண்டு இவர் பயந்ததால் அவனைவிட்டு விரைவாகக் கடந்தார். அதனால் மனதில் அமைதியில்லாமல் காணப்பட்டார். உள்ளத்தில் உறுத்தப்பட்ட அத் தொழுநோயாளியை நோக்கி திரும்பி வந்து தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து அவனைக் கட்டித் தழுவி அவன் கரங்களை முத்தமிட்டார். இச் சம்பவத்தின் மூலம் அவர் சுயநலத்தைவிட்டு இறை சிந்தையுடன் வாழ ஆரம்பித்தார்.

'சிறிய சகோதரர்கள்' என்று இவர் ஆரம்பித்த துறவற சபை 10 ஆண்டுகளில் 5000 பேரை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. துறவிகளில் தன்னை மிகவும் கடையவராக மதித்து வாழ ஆரம்பித்தார். கடவுளின் சிருஷ்டிகள் அனைத்தையும் நேசித்து அவைகளைத் தன் சகோதர சகோதரிகள் என அழைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை தன் நண்பர் லியோ அவர்களிடம் நாம் போதிக்கச் செல்வோம் என்று கூறி புறப்பட்டார். இருவரும் நகரத் தெருக்களில் தலை தாழ்த்தி அடக்க ஒடுக்கமாகச் சுற்றி அலைந்து இல்லம் திரும்பினர்.

போதிக்காமல் வந்துவிட்டோமோ என்றார் லியோ. ஏற்கனவே போதித்துவிட்டோம், உமக்கு ஞாபகமில்லையா? ஜெபம், தூய்மை, அடக்கம், ஒடுக்கம், இறை எண்ணம் கொண்டு வாழ்தல் அதுவே சிறந்த போதனை என்றார்.

தன் வாழ்நாள் முழுவதும் எளிமையும் இனிமையுமாக வாழ்ந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைத் தம்பக்கம் ஈர்த்த இவர் 44வயது வரையே உயிர்வாழ்ந்தார்.

**அன்பரே! வார்த்தைகளைவிட சத்தமாகப் பேசுவது செயல்கள் என்பதை உணர்ந்து நேர்மையான செயல்களைச் செய்கிறீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: 'பாவத்தின் வேரை அகற்றாதவரை வாழ்வில் சமாதானம் என்பது எட்டாத கனிதான்'**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 03**

# இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

நெட்டையனை வெட்டினான் ஒரு குட்டையன்; பின்பு குட்டையன் மற்றொரு நெட்டையனின் மகளை விவாகம் பண்ணினான். இவர்கள் யார்? யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2023 பங்குனி - சித்திரை மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**லாசரு, ஐத்திகு, யவீருவின் மகள், தபீத்தாள், நாயீன் ஊர் விதவையின் மகன்**

(யோவான் 11:44, அப்போஸ்தலர் 20:9-10, மாற்கு 5:35, அப்போஸ்தலர் 9:40, லூக்கா 7:14)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 112

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. கெம்பீரம் (நீதி 11:10)
04. செஸ்பாத்சார் (எஸ்றா 5:16)
05. விவேகம் (நீதி 19:11)
08. யோசபாத் (11இராஜா 9:2)
09. பிலிப்பு (மாற்கு 3:18)
11. மொர்தெகாய் (எஸ்தர் 2:7)

**வலமிருந்து இடமாக**

01. கெர்சோம் (யாத் 18:3)
06. மிகாயா (1இராஜா 22:17)
07. யாக்கோபு (மாற்கு 3:17)
13. ஆரோக்கியமுள்ள (நீதி 15:4)

**மேலிருந்து கீழாக**

02. நெகேமியா (நெகேமியா 1:4)
03. பாவியைக் (நீதி 13:6)
04. செபுலோன் (ஆதி 35:23)
10. ஆகாக் (1சாமு 15:8)

**கீழிருந்து மேலாக**

09. பிலேயாம் (எண்ணாகமம் 23:10)
12. ரோதை (அப் 12:13-14)
13. ஆபேத்நேகோ (தானியேல் 1:7)

# வினாவிடை 114

## சரியான பதில்கள்

01. தாவீது - 1நாளாகமம் 28:9
02. செப்பனியா - செப்பனியா 2:2
03. இயேசு கிறிஸ்து - மாற்கு 1:13
04. யாக்கோபு - ஆதியாகமம் 32:26
05. ஏதேன் தோட்டத்தில் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னாரோ? என்று சர்ப்பம் கேட்டது. - ஆதியாகமம் 3:1
06. தாவீது - சங்கீதம் 40:8
07. நேபுகாத்நேச்சார் - தானியேல் 4:36
08. யோபு - யோபு 7:20
09. யோயாக்கீன் - 11நாளாகமம் 36:9
10. தேவதூதன் அப்.யோவானைப் பார்த்து ஏன் ஆச்சரியப்படுகிறாய்? என்று கேட்டான். - வெளி 17:7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




☐ போதகர் வேதநாயகம் மகாராஜா




பலவேளைகளில் அனேகருடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையின் சத்தம் கேட்பது ஏளனமாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய வார்த்தை அது ஜீவனுள்ளது. அது என்றுமே மாறாதது. தேவனுடைய வார்த் தைகள் மனிதன் தேவனோடு ஒப்புரவாகும்படி கொடுக்கப்பட்டவைகள். அவை எம்முடைய நல்வாழ்வுக்காக கொடுக்கப்பட்டவைகள். எனவே எங்களுடைய வாழ்க்கையில் இந்த வார்த்தைகள் அனுதினமும் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். ஒருபோதும் கர்த்தருடைய வசனத்தை புறம்பே தள்ள வேண்டாம். எங்களுடைய வாழ்க்கையை தேவனுடைய வசனத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும்.

பேதுரு ஆண்டவரை அறிகிற சந்தர்ப்பத்திலும், அறிந்த பிற்பாடும் அவர் விட்டுவிட வேண்டிய காரியங்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருக்குச் சொல்லிக் கொடுத்தார். அது பேதுருவினுடைய வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. எங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வோமாயிருந்தால் அது உண்மையில் நிறைவான, சிறப்பான ஆசீர்வாதத்தை எங்களுடைய வாழ்க்கையில் கொண்டு வரும்.

## 1. உன்னுடைய முயற்சியை விட்டுவிடு; என்னுடைய முயற்சியோடு இணைந்து கொள். உனக்கொடு பெரிய எதிர்காலம் உண்டு!

லூக்கா எழுதிய சுவிசேஷத்தில் ஆண்டவர் பேதுருவை அழைக்கிற சந்தர்ப்பம் சொல்லப்படுகிறது. ஆண்டவர் பேதுருவிடம் வந்து உரையாடிய போது பேதுருவின் வார்த்தைகள் எப்படியிருந்தது என்றால், "நாங்கள் எவ்வளவு முயற்சி பண்ணியும் ஒன்றும் கிடைக்கவில்லை" என்பதாக காணப்பட்டது. **லூக்கா 5:5 அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்**. பேதுருவைக் குறித்து சொன்னால், அவன் கடலைக் குறித்து மிகுந்த அனுபவம் உள்ள ஒருவன். சுருக்கமாக சொன்னால் "கடலிலே பிறந்து; கடலிலே வளர்ந்தவன்" என்று சொல்லலாம். அப்படியென்றால் கடலைக் குறித்து அவனுக்கு சொல்லவே தேவையில்லை. பலவேளைகளில் நாம் யோசிக்க வேண்டும், நாம் இதுவரை பெற்றுக் கொண்ட அனுபவத்தைப் பார்க்கிலும் சிறப்பான அனுபவத்தை இயேசு கிறிஸ்துவால் எமக்குத் தரமுடியும். இதுவரை தேவனுக்காக, தேவ சமூகத்திலே, தேவ பிள்ளைகளாக எத்தனையோ அனுபவங்களுக்குள் கடந்து வந்திருக்க முடியும். ஆனால் இதைவிடவும் சிறப்பான அனுபவம் தேவனிடத்தில் உண்டு. நாம் தேவனைப் பார்க்கிறபோது அவரை உயர்த்தியே பார்க்க வேண்டும். பேதுரு கிறிஸ்துவை உயர்த்திப்பார்க்கிற மன நிலையுள்ளவனாக இருந்ததால் இயேசு சொன்னபோது; **"ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படி வலையைப் போடுகிறேன்"** என்று தாழ்மையோடு அதை அப்படியே ஏற்றுக்கொண்டான்.

உன்னுடைய முயற்சி, உன்னுடைய பிரயாசம், உன்னுடைய பெலத்தைப் பிரயோகிக்கிறவிதம் இவையெல்லாம் உன்னுடைய வாழ்வில் சிறப்பாக இருந்திருக்கிறது. இதன் பின்பு தான் ஊழியத்திற்கு அழைக்கப்போகிறார். ஒன்றை சுட்டிக்காட்டுகிறார்; நீ சிறப்பான தொழிலாளி, பண்புள்ள மனிதன். (எப்படியென்றால் இராமுழுவதும் கஷ்டப்பட்டோம் ஒன்றும் கிடைக்கவில்லை ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படி செய்கிறேன் என்று சொன்னான்) **எனவே பண்பு நிறைந்த ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ கற்றுக்கொண்ட மனிதன் பேதுரு.** ஆனாலும் அதற்குள் இன்னொன்று இருந்தது என்னவென்றால், **ஆண்டவருடைய மேன்மையான அனுபவத்திற்குள் செல்கிற செயல் வரவேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார்**. நாங்கள் தேவனுடைய உறவில், தேவனை சம்பந்தப்பட்ட காரியங்களில் ஒரு வேளை வளர்ந்திருக்கலாம், அதில் சிறப்பானவர்களாகக்கூட இருக்கலாம். ஆனாலும் எங்களுக்குரிய இன்னுமொன்று இருக்கிறது, தேவனிடத்தில் பெற்றுக்கொள்ளத்தக்கதான சிறப்பான அனுபவமும் ஒன்று உண்டு. அதைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகிற போது தட்டாமல் அதைப் பெற்று எங்களுக்கு ஏற்கனவே இருந்த அனுபவத்தோடு கூட்டிக்கொண்டால் உண்மையில் தேவனுடைய ராஜ்யத்தில் எம்மை பிரயோஜனம் உள்ளவர்களாய் மாற்றுவார்.

ஆண்டவருடைய வார்த்தையின்படி பேதுரு வலையைப்போட்ட போது திரளான மீன்கள் அகப்பட்டது. பேதுருவினுடைய வாழ்க்கையில் இவ்வளவு காலமும் **அவனுடைய அறிவுக்கு எட்டிய அனுபவமும், அறிவுக்கெட்டிய முயற்சியும் நடந்தது. ஆனால் இயேசு சொன்ன போது அறிவுக்கப்பாற்பட்ட அனுபவமும், அறிவுக்கப்பாற்பட்ட முயற்சிக்குள்ளும் போனான்.** கிறிஸ்துவை எங்களுடைய தெய்வமாக ஏற்றுக் கொண்டால் எந்தவொரு தடையுமில்லாமல் அவருடைய நடத்துதலுக்குள் நாங்கள் எங்களை அர்ப்பணிக்க வேண்டும். தேவனுடைய சாட்சிக்காக எங்களை அணிப்படுத்துகின்ற வேளை அவரைப் பற்றிய அறிவைப் பெற்று, அவரைப் பற்றி அறிவிப்பதற்காக எங்களை தயார்ப்படுத்துகிற காலம் சிறந்த காலம் ஆகும். **எனவே கிறிஸ்துவினுடைய பாதத்தில் அமர்ந்திருங்கள். தேவனோடு ஆவியிலே உறவாடுங்கள். உங்களுடைய நேரங்களை, காலங்களை வீணடிக்க வேண்டாம். உங்களுடைய நேரங்களை தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதற்கு விட்டுக் கொடுங்கள்.**

இயேசு பேதுருவின் அருகில் வந்தவுடன்தான் பேதுருவினுடைய வாழ்வில் மாற்றம் வந்தது. பேதுரு தேவனுடைய வார்த்தையில் சங்கமித்த போது தான் அவனுடைய வாழ்க்கையில் மாற்றம் வந்தது. எப்படி வார்த்தையில் சங்கமித்தது என்றால் இயேசு சொன்ன போது பேதுரு அப்படியே நடந்து கொண்டான். **நீ உன்னுடைய முயற்சி, உன்னுடைய தெரிவு, உன்னுடைய செயல் எல்லாவற்றையும்விட நான் இன்னும் செய்யப்போகிற பெரியவைகளை நீ காண்பாய்** என்று ஆண்டவர் கற்றுக் கொடுத்தார். ஏன் இப்படியொரு துன்பம்? இப்படி ஒரு கஷ்டம்? இப்படி ஒரு வியாதி? என்று ஒருவேளை யாருக்கும் தெரியாமல் உங்கள் தலையணையை கண்ணீரால் நனைத்துக் கொண்டிருக்க முடியும். ஒருவருக்கும் சொல்ல முடியாமல் உங்களுடைய ஏக்கங்களை உங்களுடைய இருதயத்தில் வைத்து கதறிக் கொண்டிருக்க முடியும். யோசித்துப் பாருங்கள், ஆண்டவரே உம்முடைய வார்த்தைக்கு எங்கே நான் கீழ்ப்படியாமல் போனேன்? உம்முடைய திவ்விய சத்தத்தை எங்கே நடைமுறைப்படுத்தாமல் போனேன்? என்று கேளுங்கள். ஏனென்றால் இயேசு சொன்னவுடன் பேதுரு அதை நடைமுறைப்படுத்தியதால் உடனே ஆசீர்வாதம் கிடைத்தது.

நாம் கிறிஸ்தவ பெற்றோருக்குப் பிள்ளைகளாக பிறந்திருக்க முடியும் அல்லது உங்களுடைய இரட்சிப்பு உறுதியானது என்ற நம்பிக்கை உடையவர்களாக இருக்க முடியும். ஆனால் அதற்குள்ளும் தேவனுடைய முயற்சிக்கு எங்களுடைய வாழ்க்கையை ஒப்புக் கொடுக்காத எதாவது ஒரு சந்தர்ப்பம் இருந்தாலும் எங்களுடைய வாழ்வில் பெரிய ஆசீர்வாதக் குறைவு காணப் பட்டுக்கொண்டேயிருக்கும். **தேவன் நடத்தும் வழியில் நாம் முயற்சி பண்ணுவதே சிறப்பான ஒரு ஆசீர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத்திற்கான பாதை. ஆண்டவர் பேதுருவுக்கு ஆரம்பத்திலே கற்றுக் கொடுத்த ஒன்று **"நீ உன்னுடைய முயற்சி அல்ல, தேவனுடைய முயற்சி யில் உன்னை இணைத்துக் கொள்".** இந்தவேளை நீங்களாய் முயற்சி பண்ணி களைத்துவிட்டீர்களா? உங்களு டைய வாழ்க்கைக்கான தேவனுடைய முயற்சியில் நீங்கள் உங்களை விட்டுக் கொடுங்கள். எத்தனையோ எதிர்பார்ப்பு கள், வாழ்க்கையை, தொழிலை, கல்வியை குறித்த கண்ணோட்டங்கள் உங்களுக்கு இருக்கலாம். அது நல்லது ஆனால் ஒன்று **அவையெல்லாவற்றையும்விட சிறப்பான கண்ணோட்டத்தை இயேசு வைத்திருக்கிறார். நீங்கள் உங்களைக் குறித்து நினைத்திருக்கிற நினைப்பை விட உங்களைக் குறித்து சிறப்பான நினைவு தேவனிடத்தில் உண்டு.**

உங்களுடைய வாழ்வில் இருக்கிற குறைவைக் குறித்து நீங்கள் அழுது கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அந்த குறைவு நிறைவாவதற்குரிய சிறப்பான நோக்கம் தேவனிடத்தில் உண்டு. உங்களை துன்பப்படுத்துகிற அந்த நிகழ்விற்குள் இருந்து வெளியே வரு வதற்குரிய சிறப்பான முயற்சி இயேசு வினிடத்தில் உண்டு. நாங்கள் செய்ய வேண்டியது, அந்த முயற்சிக்கு எங்களைக் கீழ்ப்படுத்துவது தான். **உங்களுடைய ஆசீர்வாதத்திற்கு உங்களிடம் முயற்சி உண்டு ஆனால் நீங்கள் செய்கிற முயற்சியைவிட சிறப்பான முயற்சி இயேசுவிடம் உண்டு. தேவனுடைய முயற்சிக்கு எங்களை விட்டுக் கொடுத் தால் உலகத்தில் வாழ்வதற்குரிய ஆசீர்வாதமும் கிடைக்கும்; தெய்வீக ஆசீர்வாதமும் கிடைக்கும்.**

## 2. அன்பான முறையில் தேவ சித்தத்தை தடுக்காதே.

**மத்தேயு 16:16 சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனு டைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.** ஆரம்பத்தில் இயேசு தான் எருசலே முக்கு சென்று அங்கே படப்போகிற பாடுகளைக் குறித்து சொன்ன போது, **மத்தேயு 16:22 அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டு போய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான்.** பேதுரு இயேசுவோடு அன்பாக இருந்தவன். பேதுரு நல்ல திறமைசாலியாக இருந்தான். அன்புள்ள வர்கள் கடிந்து கொள்வார்கள் ஆனால் பேதுரு இயேசுவின்மேல் வைத்த அன்பை பிசாசு பிடித்துக் கொண்டான். இந்தக் காரியத்தில் தான் கிறிஸ்தவர்கள் பெரிய தவறை விடுகிறார்கள். அது யாருக்கும் தெரியாது, தேவனுடைய நல்ல காரியத் திற்காக சொல்கிறான். எங்களுக்கு இப்படி நடந்தால்; எனக்காக கதைத்தான் என்று சொல்வோம். இந்த அன்புள்ள நல்ல வார்த்தைக்குள்ளாய் மறைந் திருக்கிற நரித்தனத்தை ஆண்டவர் கண்டார். **அன்புக்குரியவர்கள் உனக்கு ஆசீர்வாதமாக, நன்மைக்காக பேசி னாலும் தேவசித்தம் உடைக்கப்படு கிறதா?** என்பதைப்பார் என்று ஆண்டவர் பேதுருவுக்கு கற்பித்தார்.

**நீ அன்பாய் பேசுகிறாய் ஆனால் தேவ சித்தத்தை உடைக்கிறாய்! என் மீது காண்பிக்கிற பரிவின் மூலம் தேவ திட்டத்தை உடைக்கிறாய் என்று இயேசு காண்பிக்கிறார்.** பல வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் தேவ சித்தம் துன்பமானது தான், தேவ சித்தம் துன்பத்தின் வழிதான் அதற்காக இன்பமான, எம் சார்பிற்கு நன்மை போல வரும் வார்த்தைக்குள் சாத்தானின் திட்டத்தை நீ கண்டுகொள் என்று ஆண்டவர் பேதுருவிற்கு சொல் கிறார். யோசேப்பிற்கு தேவ சித்தம் துன்பமாகவே வந்தது. எகிப்தில் *பிரதம மந்திரியாக வரவேண்டிய வர் தன் சொந்த சகோதரரால் விற்கப்பட்டுப்போனார். சென்ற இடத்திலும் துன்பம், அந்த துன்பத் திற்குள்தான் தேவசித்தம் நிறை வேறிக் கொண்டிருந்தது.* அன்பான வார்த்தைகள் நல்லது, எங்கள் மீது பாசம் காண்பிப்பது நல்லது ஆனால் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள் சத்துருவின் திட்டம் என்னவென்றால், **சில அன்பு பாசங்களுக்குள்ளாய் தேவ சித்தத்தை உடைப்பான். ஆவிக்குரிய ரீதியில் எப்போதும் தெளிவாய் இருங்கள்.**

**மத்தேயு 16:23a அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயி ருக்கிறாய்.** அவர் பேதுருவைப் பார்த்து சொல்லவில்லை, பேதுருவின் அன்பை, பரிவை ஆட்கொண்டு தேவ சித்தத்தை உடைக்கும்படி இயேசுவை ஏவும்படி பேதுருவுக்குள் இருந்து செயற்பட்ட சாத்தானை பார்த்து தான் சொன்னார். ஒரு ஆவிக்குரிய தெளிவு கிறிஸ்தவர் களுக்கு வேண்டும். ஒரு வார்த்தை பேசும் போது அவர்களுடைய நோக்கம் என்னவென்று புரிந்து கொள்கிற ஆவிக்குரிய தன்மை ஓரளவாவது வேண்டும். வேதம் சொல்கிறது, கடைசி நாட்களில் பிசாசு எவனை விழுங்கலா மோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித்திரிகிறான் என்று. பிசாசு விழுங்குவது என்றால் நாம் நினைக்கி றோம் பிசாசின் வாய்க்குள் போவது மட்டும் தான் என்று. **அவன் எங்களு டைய அன்பு நிறைந்த சுபாவத்தைப் பிடித்துக் கூட எங்கள் தேவ சித்தத்தை உடைக்க முடியும். எங்களது இரக்க குணத்தைப் பிடித்துக்கூட தேவ சித்தத்தை உடைக்க முடியும்.** எனவே பிசாசு எப்படிப்பட்ட விதத்தில் அணு கினாலும் அதை இனங்கண்டு கொள்ளக் கூடிய ஆவிக்குரிய தெளிவை தேவ பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு, கிறிஸ்து அருகில் இருந்த போது, தேவ பிரசன் னத்தில் இருந்த பேதுருவினுடைய சிந்தனைக்குள் சாத்தான் புகுந்து, அவனுடைய அன்பைப் பிடித்து தேவனுக் காக வாழும் வாழ்க்கையைப் பிடித்து தேவனுடைய சித்தத்தை உடைக்க முயற்சி செய்ய முடியும். ஆகவே நாம் இயேசுவோடு கூட நடந்து, கிறிஸ்துவின் அன்பில் நிலைத்து, கிறிஸ்து காண்பிக் கிற ஆன்மீக அறிவொளியைப் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் வெளிச்சத் திலே பிசாசு கொண்டு வருகிற சதித் திட்டங்களை, நாச மோசங்களை, எங்களு டைய வாழ்க்கையை சிதறடிக்கிற சத்துருவை இனங்கண்டு நாம் தேவ சித்தத்திற்காய் வாழ வேண்டும். அதற்காக எங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

பேதுருவே நீ அன்பான முறையில் பரலோக தேவ சித்தத்தை தடுக்காதே, நீ என் மீது கொண்ட நேசத்தை வைத்து சத்துரு உன்னை தாக்க இடங்கொடுக் காதே என்று காண்பிக்கிறார். பிசாசு எங்கள் வாழ்க்கையை ஆட்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தந்திரங்களை வைத்திருக்கிறான். நாம் அவைகள் ஒன்றுக்குள்ளும் சிக்காது தேவ பிரசன்னத்தில் அவைகளை இனங்கண்டு கொள்ள வேண்டும், வெற்றி கொள்ள வேண்டும். பேதுரு அதை இனங்கண்டு கொள்ளவில்லை. நாம் கடைசியாக தனியாக ஜெபித்து எத்தனை நாட்கள்? எப்படி பிசாசின் தந்திரங்களை இனங்கண்டு கொள்ளப் போகிறோம்? கர்த்தர் கிருபையாய் இரங்குவாராக.

பலவேளைகளில் யாராவது தீமையாக துன்பப்படுத்தக்கூடிய விதத்தில் பேசினால் தான் இடறல் என்று நினைப்போம். ஆனால் பேதுருவுக்கும் இயேசுவுக்கும் இடையே நடந்த சம்பாசனையை வைத்துப் பார்க்கும் போது கரிசனை, அன்பு, பாசம் போன்ற பேச்சுக்களுக்குள்ளும் தேவ சித்தத்தை உடைக்கிற செயல் உண்டு. பேதுரு அன்பான வழியில் தேவ சித்தத்தைத் தடுக்க வந்தான். தாவீது சொல்கிறார்: "நான் அழுகையின் பள்ளத் தாக்கை உருவ நடந்து, அதை நீரூற்றாக்கிக் கொண்டேன்" தாவீது தனது கண்ணீரை நீரூற்றாக்கிக் கொண்டார். அவருக்குத் தெரியும் இதுதான் தேவ சித்தம் என்பது. தாவீது அதைவிட்டு ஓடவில்லை அல்லது அதற்காக வேறு ஒன்றை செய்யவுமில்லை. மாறாக அதற்குள்ளாகவே கடந்து சென்றார்.

ஒருவர் சொன்னார், அன்னாள் அழுகையின் பள்ளத்தாக்கில் உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொண்டாள். அந்த நீரூற்று சாமுவேல் என்று. அவள் அழுது கொண்டிருந்தாள், அதைத் தாங்கிக் கொண்டாள், அதைக் கடந்து வந்தாள். அன்னாள் இவற்றைச் செய்யாமல் தனது கணவன் மேல் பழியை போடவில்லை. எனக்குத் தெரியும் ஒரு சகோதரரின் வாழ்க்கையில் தொடர்ச்சியான வேதனை, துன்பம். ஆனால் அவரோ பேசும் போது, அந்த வேதனைக்குள்ளும் தேவனைக் குறித்த நல்ல சாட்சியைச் சொல்லிக் கொண்டேயிருப்பார்.

இதுவரை நாம் எந்த வழியில் தேவ சித்தத்தை உடைத்திருக்கிறோம்? சிலர் உங்களைக் கடிந்து கொண்டால் இவன் முன்பு போல இல்லை என்று சொல்லாதீர்கள். முன்பு போல இல்லை என்பதை நாங்கள் விட்டுவிட்டு நான் முன்பு போல இல்லை. அது தான் முன்பு போல இல்லை என்று யோசித்தால் தேவனுடைய சித்தத்திற்குள் தொடர்ந்து நாம் பிரகாசிக்க முடியும். குற்றத்தை மற்றவர்கள் மீது போடவேண்டாம். என் மீது போட்டேன் என்றால் அப்போது தேவ சித்தம் நிறைவேறும்.

துன்பமான முறையிலும் தேவ சித்தம் வரும்; அதை இன்பமான முறையில் யாரும் கொள்ளையடிக்காமல் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைக் காத்துக் கொள்ளுங்கள். தேவன் உங்களுடைய வாழ்க்கையைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறார்.

மனிதனுக்குள் பாவம் முதலாவது புகுவதற்கு சத்துரு ஆதாமின் மனைவியைப் பிடித்தான். ஆரம்பத்தில் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செயலாற்ற, நெருங்கிய உறவின் நிலை, மிகவும் அன்பு கூருகிற ஒரு நிலை. அந்த நிலையில் பிடித்து தேவசித்தத்தை உடைத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தேவனுடைய சித்தம் என்பது நாம் நேசிக்கிற எல்லாரையும்விட முதன்மையாக நேசிக்கப்பட வேண்டியது. அதுதான் ஆண்டவர் சொன்னார், உங்களுடைய கணவனையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ, பெற்றோரையோ, யாரையாவது என்னிலும் அதிகமாக நேசித்தால் அவன் எனக்கு சீஷனாய் இருக்கமாட்டான் என்று. ஏன் தெரியுமா? **முதலாவது என் மீது நேசம் இருந்தால் தான் தன்னுடைய சித்தத்தை ஒரு மனிதனால் நிறைவேற்ற முடியும் என்பது தேவனுக்குத் தெரியும்.**

சத்துரு ஏவாளுடன் பேசும் போதே அவர்கள் சார்பாக அன்பாக பேசினான். ஆனால் இந்தக் காரியத்தில் ஒரு காரியத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தேவனைவிட நாங்கள் மிக அதிகமாக யாரை நேசிக்கிறோம்? யாரில் அன்பு கூருகின்றோம்? அந்த நேசங்களைக் குறித்துக் கூட ஒவ்வொரு ஆவிக்குரிய கிறிஸ்தவர்களும் தெளிவாக இருக்க வேண்டும். **ஏனென்றால் அவர்கள் பக்கம் தவறு இருக்க முடியாது, அவர்கள் அப்படி யோசிக்க மாட்டார்கள். ஆனால் நன்மை செய்கிற விதத்தில் சத்துரு ஒரு தூண்டுதலை கொடுப்பான்.** இதிலே விளிப்பாக இருக்காவிட்டால் விழுந்து போய் விடுவோம். எப்போதும் தேவனை முதன்மையாக நிறுத்தி அவரையே பார்க்கிற போது நாம் விழுந்து போகாமல், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற முடியும். சிலவேளை சில அன்புகள், பாசங்கள், நேசங்கள் கூட கர்த்தருடைய கட்டளைகளை **மறைக்க அல்லது மறந்து போகப் பண்ணும். எனவே ஆவிக்குரிய கண்களோடு அவைகளைப் பார்க்க வேண்டும்.**

நீங்கள் பிள்ளையாக, பெற்றோராக, கணவன் அல்லது மனைவியாக இருக்கலாம். **ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் நீங்கள் நேசிக்கிறவர்கள் மூலம் வருகிற காரியங்கள் எனக்கும் தேவனுக்கும் இடையில் இருக்கிற உறவை உடைக்கிற சூழ்நிலையை உருவாக்குமென்றால் அதைக் கண்டு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.**

வனாந்தரத்திலே இயேசுவைச் சாத்தான் சோதிக்கிற போது அன்பாகப் பேசி, வேத வசனத்தைக் காண்பித்துக் கதைத்தான். ஆனால் இயேசுவுக்குத் தெரியும் அவையெல்லாம் தேவ சித்தத்திற்கு புறம்பானது என்பது. எனவே அப்பாலே போ சாத்தானே என்று அவனை விரட்டினார். அதில் தோற்றுப் போன பிசாசு பின்பு அவருடைய நெருங்கிய சீஷரைக் கொண்டு பேசிப் பார்த்தான். அதிலும் அவன் தோற்றுப் போனான். எந்தப் பக்கத்தாலும் சத்துரு ஆண்டவரோடு உங்களுக்கு உள்ள உறவை உடைக்க முயற்சித்தாலும் நீங்கள் அதை இனங்கண்டு கொள்ள வேண்டும்.

## 03. உலகம் போகின்ற போக்கில் நீ போகக்கூடாது என்று கற்பித்தார்.

**யோவான் 13:6-8a (6.) அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். 7. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார். 8. பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். பேதுரு ஏன் அப்படிச் சொன்னான் என்றால், இயேசு ஆண்டவர், பெரியவர், போதகர். இப்படிப்பட்ட பெரிய ஆண்டவர் என் கால்களைக் கழுவுவதா? என்ற மனநிலை அவனுக்குள் இருந்திருக்கிறது. அது சரியான மனநிலை தான். சாதாரணமாக உலகத்தின் பார்வையும் இதைப் போலத்தான் இருக்கும். பேதுருவுக்கு ஆண்டவர் கிறிஸ்தவ வாழ்வுக்குள் இருக்க வேண்டிய இன்னொன்றை செயலின் மூலம் காண்பித்தார். அதாவது உலகம் போகிற போக்கில் நீ போகக்கூடாது என்பதைக் காண்பிக்கிறார்.

உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக் கூடாது என்று வேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. உலகத்தில் எத்தனையோ விதமான மக்கள் கூட்டத்தினர் இருக்கி றார்கள். அந்தந்த இடங்களில் இருந்து ஆண்டவர் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை பிரித்தெடுக்கிறார். வட்டம் வட்டமாக நிறைய ஜனக்கூட்டம் உண்டு. ஒருவன் இரட்சிப்படையும் போது ஒரே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படுகிறான். அப்படியென்றால் பிரித்தெடுத்து புறம்பான ஒரு வட்டத்திற் குள் தான் வருகிறோம். நீங்கள் எந்த வட்டத்தில் இருந்து வந்தாலும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட புதிய வட்டத்திற்குள் இருக்கிறீர்கள். இந்தப் புதிய வட்டத்திற்குள் வந்தவர் களின் செயல்முறைகள் பிற்பாடு அந்த பழைய வட்டத்தோடு இணைக்கப்பட ஒருபோதும் முடியாது. ஆண்டவருக் குத் தெரியும் தனக்கு சாட்சியாக நிற்கப்போகிற ஒரு மனிதன் எந்த விதத்திலும் தவறுவிடக் கூடாது என்பதற் காய் கிறிஸ்தவனாக வாழ வேண்டிய முறை இது தான் என்று வாழ்ந்து காட்டினார்.

ஒரு செய்தியில் பார்த்தேன், கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது, அதில் ஜனங்கள் எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்த போது ஒரு பெரியவரின் காலைக் கழுவி அந்த தண்ணீரை கீழே இருக்கும் ஒருவர் குடிக்கிறார். அவர் அவரை மேன்மைப்படுத்து கிறேன் என்பதைக் காண்பிப்பதற் காக செய்தார். இயேசு கிறிஸ்து இப்படிச் செய்யும்படி சொல்லவில்லை. ஆனால் உலகத்தில் அதுதான் நிலை. பெரியவர்களின் கால்களை சிறியவர் கள் கழுவுவது. இயேசு கற்பித்தார் நீ பெரியவனானாலும் சிறியவனின் கால் களைக் கழுவு என்பதை. வருங்காலத் தில் உன்னுடைய காலை யாரும் கழுவா விட்டாலும் நீ மற்றவர்களுடைய காலைக் கழுவ வேண்டும் என்று இயேசு பேதுருவுக்கு கற்றுக் கொடுத்தார். கிறிஸ்தவனாய், திருச்சபையின் ஆரம்ப தூணாய் இருக்கப் போகிற நீ செய்ய வேண்டிய வழிமுறை உண்டு. கிறிஸ்தவம் என்பது உலகத்தின் பார்வைக்கு நேர் தலைகீழானது. எவ்வளது தாழ்மையாக, தேவனுக்காக வாழ முடியுமோ அவ்வளவு தாழ்மை யாக வாழ்வது தான் கிறிஸ்தவம். இயேசு பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்ததே மிகப்பெரிய தாழ்மை. மனிதனாக வந்தவர் மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக் கழுவினார். கிறிஸ்தவத்தின் சாரம்சம் எதுவென்பதை இயேசு வாழ்ந்து காட்டினார். இயேசு கீழ்ப்படிவைப்பற்றி சொல்லும் போது அவர் கீழ்ப்படிந்து காண்பித்திருக்கிறார். முன்மாதிரியாக வாழ்ந்து காண்பிக்க வேண்டும் என்று சொல்ல முன்பு அவ்வாறு வாழ்ந்து காண்பித்திருக்கிறார். **எனவே கிறிஸ்தவம் என்பது பேச்சிலே அல்ல பெலத்திலேயே தங்கியிருக்கிறது.** பெலன் என்று சொல்லும் போது அது எங்களுடைய நடைமுறை வாழ்க்கையிலே கலந்ததாக இருக்க வேண்டும் என்று இயேசு தன்னுடைய செயலின் மூலம் பேதுருவுக்கு காண்பித்தார்.

கிறிஸ்தவம் என்பது சாதாரணமாக வாழ்ந்து விட்டுப் போகவேண்டியது இல்லை. மாறாக கிறிஸ்தவம் என்பது நிறைவேற்றி முடிக்க வேண்டிய பகுதிகளைக் கொண்டது. அவைகளில் தவறும் போது உண்மை கிறிஸ்தவனாக, உண்மை ஊழியனாக வாழமுடியாது என்பதை இயேசு பேதுருவுக்கு செய்த செயலின் மூலம் காண்பிக்கிறார். **யோவான் 13:13-14 (13.) நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். 14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.** காலைக் கழுவுவதின் தார்ப்பரியம் என்னவென்றால், கிறிஸ்தவர்கள் எந்த நிலையினும் எங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் மேன்மைக்காக எங்களைத் தாழ்த்துவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் பூரணத்துவத்திற்காக, கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சிக்காக எங்களை எப்போதும் தாழ்த்துவதற்குரிய உன்னத நிலையில் வாழ வேண்டும் என்பது தான் அந்த அர்த்தம். இதை நாங்கள் செய்ய வேண்டும் இல்லையென்றால் எங்களுடைய வாழ்வு உண்மையான கிறிஸ்தவ தன்மையோடு செல்ல முடியாது. எங்கு பார்த்தாலும் பெருமை, தேவன் புரட்டிப் போட்டவைகளை திரும்ப கட்டுகிற முயற்சிகள், தேவன் குலைத்துப் போட்டவைகளை திரும்ப சரிபண்ணுகிற சில பெருமைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படியானவர்கள் ஒரு போதும் பரலோகம் செல்ல முடியாது. தேவனுடைய பிள்ளைகளாகவும் இருக்க முடியாது.

சில சந்தர்ப்ப சூழ்நிலை உருவாகிற போது நாங்கள் எப்படியானவர்கள் என்பதை அது காண்பிக்கும். சிலவேளை தேவையற்ற முயற்சிகள் எல்லாம் செய்வோம். ஏனென்றால் எங்களைத் தாழ்த்த முடியாமல் இருப்பதினால் தான். தேவன் எங்களைப் பரிசுத்த ஜாதியாக வைத்திருக்கிறார். இந்த பரிசுத்த ஜாதிக்கு, நாம் விட்டுவந்த பாவ ஜாதியோடு இனித்தொடர்பில்லை. கிறிஸ்தவம் என்பது உலகம் பார்க்கிற வண்ணமாக இல்லை; மாறாக கிறிஸ்தவம் என்பது தேவன் பார்க்கிற பிரகாரமாக இருக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய வாஞ்சையாக இருக்கிறது.

**04. என்னுடைய வாக்குத்தத்தங்களை மறந்துபோகாதே. அது உன்னைக் கைவிடாது.**

**யோவான் 21:1-3 (1.) இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப் படுத்தின விவரமாவது: 2. சீமோன் பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமா வும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபெ தேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டு பேரும் கூடியிருக்கும் போது, 3. சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார் கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.** ஆண்டவர் பேதுருவை அழைத்த போதும் மீன் ஒன்றும் பிடிக்காமல் நின்றான். அப்பொழுது ஆண்டவர் படகை ஆழத்திற்கு கொண்டு போகச் சொன்னார். இந்த அற்புதம் நடை பெற்ற பின்பு ஏறத்தாள மூன்றரை வருடங்கள் பேதுரு இயேசுவோடு கூட இருந்தான். ஆண்டவர் செய்த அற்புத அடையாளங்களைக் கண்டு கொண்டான். இயேசு மறுரூபமாகும் போது இயேசு வோடு கூட இருந்தான். இப்படிப்பட்ட அற்புதங்களைக் கண்டு கொண்டவன் இங்கே சோர்ந்து போய்விட்டான். நொந்து, உடைந்து போய்விட்டான். ஆண்டவர் சொன்னார், உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக மாற்று வேன் என்று. அதையெல்லாம் மறந்து மறுபடியும் மீன்பிடிக்கப் போகிறான்.

**நான் மரித்து, மறுபடியும் உயி ரோடு எழும்புவேன் என்று சொன்ன** ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களை யெல்லாம் மறந்து போனான். பேதுரு வுக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறார் என்றால் தேவன் உனக்குத் தந்த வாக்குத்தத்தங்கள் ஒரு போதும் பொய் சொல்லாது. அதை நிறைவேற்றி முடிப்பேன் என்பதை நீ கற்றுக்கொள் என்று சொன்னார். உங்களுடைய வாழ்வில் சோர்ந்து போய் இருக்கிறீர் களா? தேவன் தந்த வாக்குத்தத்தங்கள் ஒரு போதும் பொய் சொல்லாது. வாழ்க்கையில் நன்மை இல்லை, சந்தோ ஷம் இல்லை, எப்போது பார்த்தாலும் வேதனைக்குரியதாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்க முடியும். ஆனால் ஒன்றை சிந்தித்துக் கொள்ளுங்கள். **உங்களை அழைத்த தேவன் அவர் உண்மையுள்ளவர். வேதம் சொல்கி றது அவர் முடிவு பரியந்தம் உங்களை நடத்துவார். தேவன் உங்களைக் கைவிடவே மாட்டார்.**

ஆரம்பத்தில் பேதுருவுக்கு புதிய அனுபவத்தைக் கொடுத்த தேவன் அவனுடைய முயற்சிகள் கைகூடாமல் இருந்த போது ஒரு புதிய முயற்சியைக் கொடுத்தார். அந்த முயற்சியின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் இங்கே மறுபடியும் வந்து நிற்கிறார். ஏன் தெரியுமா? அன்றைக்கு நான் சொன்னதை, உன்னுடைய வாழ்வைக் கொண்டு நிறைவேற்றுவேன் என்பதை வெளிப்படுத்துவதற்காக. நீங்கள் சிந்தியுங்கள் தேவன் உங்களுக்குத் தந்த வாக்குத்தத்தம் என்ன? அவர் எப்படிப்பட்ட தெய்வம் என்பதை புரிந்து கொண்டிருந்தீர்கள்? இப்போது எப்படி இருக்கிறீர்கள்? ஆண்டவர் சொல்கி றார்: உங்களுடைய சோர்வுகளைவிட்டு எழும்புங்கள், உங்களுடைய வேதனை களை என் மீது வைத்துவிடுங்கள். நான் தந்த வாக்குத்தத்தங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துக் கொள்ளுங்கள். **T.L. ஒஸ்பென் என்று சொல்லப்படுகிற மிகவும் வல்லமையான ஊழியக் காரன் இருந்தார். அவர் தன்னுடைய புத்தகத்தில் எழுதியிருந்தார்; தேவன் ஒரு மனிதனுக்கு வாக்குத்தத்தைக் கொடுக்கும் போது அந்த வார்த் தைக்குள் நிறைவேறத்தக்க அளவு வல்லமையும் அடங்கியிருக்கிறது.** தேவன் உங்களுக்கு தந்த வாக்குத் தத்தம் வெறுமையான ஒரு எழுத்து அல்ல, அது அழிந்து போகிற ஒரு காரியமல்ல. தேவன் நினைத்ததை நிறைவேற்றுவதற்காக தேவனுடைய வல்லமையால் நிரப்பப்பட்டதாக அந்த வசனம் இருக்கிறது. இனியும் சோர்ந்து போவீர்களா? ஆண்டவர் தான் சொன்னதை நிறைவேற்றுவேன் என்ப தைக் காண்பிக்க வந்திருக்கிறார்.

நான் அழைத்தவர், உன்னை தெரிவு செய்த நான் உன்னை நடத்தப் போகிறேன் என்று மீன் ஒன்றும் அகப்படாமல் நின்ற பேதுருவிடம் இரண்டாந்தரம் வந்து நிற்கிறார். **யோவான் 21:4 விடியற்காலமான போது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியா திருந்தார்கள்.** சோர்ந்து போன இடத்தி லிருந்து திரும்ப அவனைத் தூக்கு வதற்காக இயேசு வந்து நிற்கிறார். நீங்கள் எந்த இடத்தில் விழுந்து போய், ஆண்டவரை நொந்து கொண்டிருக்கி றீர்கள்? இரட்சிப்பைவிட்டுவிடுவதற்கு எத்தனைபேர் முயற்சி செய்கிறீர்கள்? நான் தேவனைத் தேடியதால் எனக்கு ஒன்றுமில்லை, கிறிஸ்துவை நம்பினால் ஒன்றுமில்லாமல் போனேன் என்று எத்தனைபேர் நினைக்கிறீர்கள். இன் றைக்கு மறுபடியும் தேவன் சொன்ன வார்த்தையின்படி வாழவேண்டும் என்ற பெரிய நோக்கத்தோடு மறுபடி தேவனுடைய முயற்சிக்குள் வருவோம். ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் ஒரு போதும் பொய் சொல்லாது. உங்களைத் தெரிந்து கொண்டிருக் கிறார், அவர்கடைசிவரைக்கும்உங்களைக் கைவிடவேமாட்டார். **யோவான் 21:15 அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத் தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.** கர்த்தருடைய வார்த்தை வீணிலே போகாது என்பதற் காய் மறுபடி எங்களோடு பேசுவார்.

**யோவான் 21:16-17 (16.) இரண்டாந் தரம் அவர் அவனை நோக்கி: யோனா வின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத் தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப் பாயாக என்றார். 17. மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந் தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை யும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.** எங்களுடைய வாழ்வின் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியமும் நன்மையானாலும் தீமை யானாலும் தேவனுடைய ஞாபகத்தில் உண்டு. இயேசு மூன்று தரம் பேதுரு விடம் கேட்டதற்கு வேத ஆராய்ச்சியாளர் கள் சொல்கிற விளக்கம் என்னவென் றால், பேதுரு மூன்று தரம் இயேசுவை மறுதலித்ததற்குரிய பாவ அறிக்கை இது என்று சொல்கிறார்கள் அவனு டைய வாழ்வில் மறைந்திருந்த எல்லா வற்றையும் ஆண்டவர் கண்டிருக்கிறார்.

பேதுருவிடம் பூமியிலே அந்த பாவத்தின் அறிக்கையை கேட்டு விட்டார் அதே போல எங்களிடம் இங்கே கேட்கப்படவில்லை என்று யோசிக் கலாம். ஆனால் நாம் தான் அதை உணர்ந்து அறிக்கையிட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் எங்களோடு பேசிக்கொண்டிருப்பார். அவர் உணர்த் திக்கொண்டேயிருப்பார். ஆனால் நாம் தான் எம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டே இருப்போம். தேவன் வந்து கேட்க வேண்டும் என்று நினைப்போம். **இது தேவ ஆவியான வருடைய நாட்கள். பேதுருவைத் தூக்கி எடுத்த தேவன் எங்களையும் தூக்கி எடுக்கும்படியாய் இந் நாட்களில் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.**

**இந்த நாட்களில் தங்களுடைய விழுகைக்குரிய காரணங்களில் தேர்ச்சி பெற்ற பலர் இருக்கிறார் கள். பேதுருவிடம் இயேசு வந்து கேட்ட போது, அவனால் ஒரு காரண மும் சொல்ல முடியாமல் போய்விட்டது.** இங்கு பேதுரு கோபத்தோடு பதில் சொல்லியிருக்க முடியும். ஆனால் உடைந்த இருதயத்தோடு பதில் சொன்னான். *என் தேவன் முன்பே சொன்னார், நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று. ஆனால் நான் தான் இல்லை, இல்லை, நான் சாவிலும் காவலி லும், மரணத்திலும் ஜீவனிலும் உம்மை பின்பற்றுவேன் என்று சொன்னேன். ஆனால் தவறி விட்டேன் என்று உடைந்த இருதயத்தோடு ஆண்டவர் மூன்று தடவை கேட்கிற போதும் மெது வான பிரதியுத்தரமாக சொன்னான்.* அவன் விழுந்து போனான் என்ற நிச்சயம் அது. அதிலே இருந்து வெளியே வரவேண்டும் என்று அப்படிச் சொன்னான். தேவன் எங்களுக்கு கற்றுத்தர விரும்பும் காரியங்கள் அவை எம்முடைய செவிகளுக்கு கேட்கமுடியாத காலங்கள் வரும். ஆவியானவர் உணர்த்த முடியாத நேரங்கள் வரும். அதற்கு முன்பே தேவனுக்குரிய சிறப்பான பிள்ளை களாய் வாழவேண்டும் என்றால் கர்த்தர் எம்மைக் கைவிடமாட்டார். அவருடைய வாக்குத்தத்தங்கள் பொய் சொல்லவில்லை என்பதை நினைத்து எங்களுடைய வாழ்வில் எங்கே தவறி யிருக்கிறோம் என்பதைக் கண்டு வெளியே வரவேண்டும்.

கர்த்தர் உங்களைக் கொண்டு பெரிய காரியங்களை உங்களுடைய சொந்த வாழ்க்கையிலும், குடும்பத் திலும், தேசத்திலும் செய்வார். எனவே தேவனை நன்றாய் நம்புங்கள்.

**1. தேவனுடைய முயற்சிக்கு உங்களை விட்டுக்கொடுங் கள்.**

**2. அன்பான, நேசமான முறையில் தேவ சித்தத்தை உடைக்கும்படி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிற எல்லா தந்திரங்களையும் இனங் கண்டு கொள்ளுங்கள்.

3. உலகத்திற்கு ஒத்த வேஷம் போடாமல், உலகம் பார்க்கிற விதமாக பாராமல் நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்ற வழியை கிறிஸ்து எங்களுக்கு கற்பித் திருக்கிறாரோ அதன்படி வாழ்வதை கற்றுக்கொள் வோம்.

4. ஆண்டவர் தந்த வாக்குத்தத் தங்கள் ஒரு போதும் பொய் சொல் லாது. தேவன் உங்கள் வாழ்வில் சொன்னதை, உங்கள் மீது கொண்ட சித்தத்தை நிறைவேற்றியே முடிக்கும் என்பதை மனதிலே வைத்து எந்த இடத்தில் தவறினீர்களோ அந்த இடத் தில் இருந்து வெளியே வந்து கர்த்தர் உங்களை பயன்படுத்துவதற்காக உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங் கள்.

**யோவான் 21:18 நீ இளவயதுள்ள வனாயிருந்தபோது உன்னை நீயே அரை கட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்ட மில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான் என்று மெய்யாகவே மெய் யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**'தேவன் தாமே**
**உங்களை நிறைவாக**
**ஆசீர்வதிப்பாராக'**

# குறுக்கெழுத்துப் போட்டி - 112, வினா விடை - 114

## சரியான விடை எழுதியவர்கள்

**காரைநகர்**

01. அ.எஸ்தர்
02. உ.கிறேசியன்
03. அ.தெபோரா
04. அ.கிருசாந்தன்
05. உ.சாத்ராக்
06. பா.அனுசியா
07. க.தனு
08. வி.அனுராதா
09. பா.அனுகரன்

**தர்மபுரம்**

10. வசிகரன் +
11. பி.சுடர்
12. பி.புகழ்நிலா
13. த.சுஜீனா
14. வ.வானுசன் +
15. வ.வசிகலா

**பாண்டவெட்டை**

16. மு.ஜெசிந்தா
17. சி.சுமித்திரா
18. சி.சிவனேஸ்வரன்

**வேரவில்**

19. இ.வோஜினி +

**முழங்காவில்**

20. க.நிரஞ்சினி +

**திருநெல்வேலி**

21. ந.செல்வன் *

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவைப் போல

**வேதப்பகுதி: யோவான் 8:38-44**

சில பிள்ளைகளைப் பார்த்ததும் சிலர் என்ன சொல்வார்கள் தெரியுமா? இவன் அப்படியே அவனுடைய அப்பாவைப் போலவே இருக்கிறானே. அவனுடைய நடை, அவனுடைய சிரிப்பு, அவனுடைய பார்வை எல்லாமே அவனுடைய அப்பாவைப் போலவே உள்ளது. ஆம், பிள்ளைகள் பெற்றோரைப் போல இருப்பது இயற்கையானது.

நம்முடைய தேவன் நமக்கு தந்தையாக இருக்கிறார் என்று வேதம் சொல்கிறது. அப்படி யானால் நம்மைப் பார்க்கும் போது நாம் எப்படி இருக்க வேண்டும்? நம்முடைய குணங்கள், சுபாவங்கள், செயல்கள் போன்றவை தேவனைப் போல இருக்க வேண்டும். அன்பு, இரக்கம், தாழ்மை, பொறுமை, விட்டுக்கொடுத்தல், அமைதி ஆகியவை தேவனுடைய சுபாவங்கள். இவைகள் நம்மிடமும் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் தேவனுடைய பிள்ளைகள்.

**சிந்தனைக்கு:-**

**நாம் தேவனுடைய பிள்ளைகளானால் அவரைப் போல நம்மிடமும் நல்ல சுபாவங்கள் இருக்க வேண்டும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' - செப்டம்பர் 04

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.....................................

முகவரி:...................................

.............................................

.............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன் மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

சங்கீதம் 48:14




TO:
NOOLAGAM FOUNDATION
NO 55, SOMASUNDARAM AVE,
CHUNDIKULI,
JAFFNA

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane.
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org